# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
## Tamilnadu Electricity Board Accounts And Executive Staff Union
(Regd.No.2472) (Recognised) Head Quarters:Chennai

(Affiliated With Public Service International)

E-mail: tnebaesunion@gmail.com Phone: 044-2852 0060 (Fax)

WEB : tnebaesu.net 044-2852 0131 Extn:2881

**S.Nagarajan** President | **K.Chandra Sekaran,B.A.,** General Secretary | **B.Tyagarajan,M.Com.,** Finance Secretary

**P.Anbalagan, S.Abuthayar** Vice Presidents | **S.Mahalingam, N.Ganesan** Joint Secretaries | **B.Gopalakrishnan** Organising Secretary, | **C.Suganthi** State Women Secretary

Hall No.7,MLDC Building 1st Floor,TNEB Complex,No.144,Anna Salai,Chennai-600 002.

**Assistant General Secretary**

E.Sithaiyan, Chennai

**Reginal Secretary**

M.Nagarajan, Coimbatore.

M.K.Purushothaman, Chennai/South.

S.Ayyamperumal, Nellai.

B.Gopalakrishnan, Erode.

S.Abuthayar, Maduai.

M.Liyakath Ali, Trichy.

R.Pandian, Vellore.

R.Venkatapathy, Villupuram.

M.Susairaj, Chennai/North.


கடித எண்: 80/19

25.04.2019

பெறுநர்,

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,

144, அண்ணாசாலை,

சென்னை – 2

பெருமதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம் - உறுப்பினர்கள் தொடர்பான கோரிக்கைகள் குறித்தமுறையீடுகள் - தீர்வுகாண நடவடிக்கைகள் மேற்கொள்ளவதில் தாமதம் குறித்து.

********

கடந்த ஆறு மாதங்களாக எங்களது உறுப்பினர்கள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளில் தீர்வுகாண கீழே விவரித்துள்ளபடி நிர்வாகத்திடம் முறையீடுகள் செய்துள்ளோம்.

1. **22-02-2018க்கு முன்பு பதவி உயர்வு உத்திரவு வழங்கப்பட்டு, அதற்கு பின் பதவி உயர்வு பெற்ற பொறுப்பில் பணியேற்வர்கள் புதிய ஊதிய உயர்வினை பெற்றிட விருப்பம் தெரிவித்திட அனுமதித்தல்.**
   பார்வை: எங்கள் 29-10-2018 தேதியிட்ட கடித எண்: 101/18.

2. **திங்கள் ஒன்றுக்கு ரூ.1000 தொகுப்பு ஊதியம் பெற்றுவரும் பகுதிநேர துப்புரவு பணியாளர்களுக்கு 2017 – 2018ம் ஆண்டிற்கு கருணைத்தொகை வழங்கிட வேண்டுகோள்.**
   பார்வை: எங்களது கடித எண்: 103/2018 நாள்: 29-10-18.

3. **பகுதிநேர துப்புரவு பணியாளர்கள் பிரச்சனைகளில் தீர்வுகாண நேரடி பேச்சுவார்த்தைகள் நடத்திட வேண்டுகோள்.**
   பார்வை: எங்களது 14-11-2018 தேதியிட்ட கடித எண்: 123/18.

4. **சிறப்புநிலை முகவர் பதவிஉயர்வு தற்காலிக துறவற விதிகளுக்கு சிறப்பு விதிவிலக்கு அளித்தல் குறித்து.**
   பார்வை: எங்களது 20-11-2018 தேதியிட்ட கடித எண்: 125/18. மற்றும் எங்களது 04-01-2019 தேதியிட்ட நினைவூட்டுக் கடித எண்:2/2019.

5. **தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்திட நாள் ஒன்றினை நிர்ணயித்து தகவல் அளித்திட வேண்டுகோள்.**
   பார்வை: 1. எங்களது 6-12-2018 தேதியிட்ட கடித எண்: 133/2018.
   2. எங்களது நினைவூட்டு கடித எண்:2/19 நாள்: 04-01-2019.

6. **22-02-2018 தேதிய வேலைபளு ஒப்பந்தப் படி பொறுப்புகள் அனுமதித்திட வேண்டுகோள்.**
   பார்வை: எங்களது 25-01-2019 தேதியிட்ட கடித எண்: 23/2019.

7. **மேட்டூர் அனல்மின நிலையம் - மத்திய அலுவலகப் பணியாளர்களின் அலுவலகப்பணி நேரத்தை முற்பகல் 10.30 மணிமுதல் 1.30 மணிவரையும், பிற்பகல் 2 மணி முதல் 5.15 வரையும் என்று மாற்றி அமைத்திட வேண்டுகோள்.**
   பார்வை: 1. எங்களது 03-07-2018 தேதியிட்ட கடிதம்.
   2. எங்களது 28-01-2019 தேதியிட்ட கடித எண்: 24/2019.

8. **03-05-2018 தேதிய வாரிய ஆணை எண்:11 வாயிலாக 156 துணைக் கோட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு அலுவலர் பொறுப்புகள் நாமக்கல் மின்பகிர்மான வட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தலைமை இடங்களை மாற்றிடுதல்.**
   பார்வை: எங்களது 12-12-2018 தேதியிட்ட கடித எண்: 143/2018.

ஆனால் எங்களது மேற்கண்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரைதீர்வு காணப்படாமல் உள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, இப்பிரச்சனையில் தாங்கள் தலையிட்டு எங்களது உறுப்பினர்கள் தொடர்பான மேற்கண்ட கோரிக்கைகளில் உடனடியாக தீர்வுகாண தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

(க.சந்திரசேகரன்)
பொதுச்செயலாளர்

நகல் :
1. செயலாளர் /தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
2. தலைமைப்பொறியாளர் /பணி அமைப்பு/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
3. அமைப்புச்செயலாளர் / மேட்டூர்.
4. தலைவர் /கோவை.
5. செய்திமடல்.